# செய்திகளும் குறிப்புகளும்

**25.07.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1066**

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**17. வாழ்க்கையின் விதிமுறையாக மதம்.**

அது மண்ணுலக நோக்கங்களைப் பின்தொடர்வது ஆன்மீக வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு எதிரிடையான போக்கு என்று கண்டனம் செய்வது போலத் தோன்றுகிறது; மேலும் மனிதனின் மண்ணுலகு சார்ந்த நம்பிக்கைகள் ஒரு மாயை அல்லது விண்ணுலக மனித நம்பிக்கைக்கு மாறுபாடான வீண்மை என்று கருதுவது போல் தோன்றுகிறது. அதன்பிறகு சித்பொருள், தனித்து நிற்கும் ஒன்றாக ஆகிறது, தனது தாழ்ந்த உறுப்புகளின் வாழ்க்கையை வீசியெறிந்த பிறகே, மனிதனால் அடையக்கூடியதாகிறது. ஒன்று அவன் இந்தக் கீழான வாழ்க்கையை ஒரு குறிப்பிட்ட நிலைக்குப்பிறகு, அது தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொண்ட பிறகு, விட்டு விடவேண்டும், அல்லது அதை விடாப்பிடியாக ஊக்கங்கெட, ஒறுத்தடக்க மற்றும் கொன்றழிக்க வேண்டும். அதுதான் மதத்தின் உண்மையான பொருளெனின், அதன்பிறகு மதம் மனித சமுதாயத்திற்கு அதற்குரிய சமுதாய முயற்சி நம்பிக்கை ஆர்வம் இவற்றின் களத்திற்கோ அல்லது தனிமனிதனுக்கு அவனுடைய ஜீவனின் தாழ்ந்த உறுப்புகளுக்கோ, எத்தகையதொரு ஆக்கபூர்வமான செய்தியையும் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு. ஏனென்றால் நம்முடைய இயற்கையின் ஒவ்வொரு தத்துவமும் அதற்குரிய துறையில் இயல்பாகவே அதனுடைய சொந்த முழுமையை நாடுகிறது, மேலும் அது ஒரு மேம்பட்ட சக்திக்குக் கீழ்ப்படிய வேண்டுமாயின், அதற்குக் காரணம், அந்த சக்தி இதன் சொந்தக் களத்திலேயே கூட இதற்கு ஓர் அதிகமான முழுமையையும் ஒரு அதிகமான திருப்தியையும் தருகிறது என்பதால் தான் இருக்கமுடியும். ஆனால் அது முழுமையை அடைய முடியும் என்ற சாத்தியம் அதற்கு மறுக்கப்பட்டால், அதன் விளைவாக முழுமைக்கான ஆர்வம் அதிலிருந்து ஆன்மீக நாட்டத்தால் எடுக்கப்பட்டு விட்டால், அதன்பிறகு அது தன் சுயநம்பிக்கையையும் மற்றும் தன்னுடைய சக்திகளின் அல்லது செயல்களின் இயற்கையான விரிவாக்கத்தைப் பின்பற்றும் ஆற்றலையும் இழக்கவேண்டும் அல்லது அது தன்னுடைய சொந்த விருப்பத்தை மற்றும் விதிமுறையை சுயதர்மத்தைப் பின்பற்றுவதற்காக, சித்பொருளின் அழைப்பை மறுத்துத் தள்ளிவிட வேண்டும். மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் இடையே மற்றும் சித்பொருளுக்கும் அதனுடைய உறுப்பினர்களுக்கும் இடையேயான இச்சச்சரவு, ஆன்மீகம் ஒரு துக்கமான மற்றும் துன்பமான மற்றும் கடுமையான ஒறுத்தடக்கலுக்கான, மேலும் உலகப்பொருள்களின் வீண்மை எனும் கொள்கைக்கான மதவடிவை மேற்கொண்டால் அது இன்னமும் அதிகமாக ஊக்கங்கெடச் செய்யும்; இந்த நிலை மிகையாகும் போது, அது ஐரோப்பாவின் மத்திய காலங்களில், அவற்றின் மோசமான கணங்களில், மனித இனத்தின் ஒரே நம்பிக்கை நெருங்கிக்கொண்டிருந்ததும், எதிர்பார்க்கப்பட்டதும் விரும்பத்தக்கதுமான உலகத்தின் முடிவே, தவிர்க்கமுடியாத பிரளயமே என்று தோன்றியது போல், அத்தகைய பயங்கரமான இருளும், நிராசையுமான மனித ஆன்மாவின் கிலிகளுக்கு (nightmare) இட்டுச் செல்கிறது. உலகத்தைப் பற்றிய நம்பிக்கையற்ற மனப்போக்கின் இதைவிடக் குறைந்த அளவு தீவிரமும், குறைந்த சகிப்பின்மையும் உள்ள வடிவங்களில்கூட, அது வாழ்க்கையில் ஊக்கங்கெடவைக்கும் ஒரு சக்தியாகிறது, ஆகையால் அது வாழ;க்கைக்கு ஓர் உண்மையான விதிமுறையாகவும் வழிகாட்டியாகவும் இருக்கமுடியாது. அனைத்து நம்பிக்கையின்மையும், அந்தந்த அளவுக்கு சித்பொருளையும், அதனுடைய முழுமையையும் அதனுடைய சக்தியையும் மறுப்பதாகும், உலகில் கடவுளின் வழிகளில் பொறுமையில்லாமையாகும், உலகைப் படைத்து அதை எப்போதும் வழிநடத்திச் செல்லும் தெய்வீக அறிவு மற்றும் இச்சாசக்தி இவற்றில் நம்பிக்கைக் குறைவாகும். அது அதியுன்னத அறிவு மற்றும் சக்தியைப் பற்றிய ஒரு தவறான எண்ணத்திற்கு இடமளிக்கிறது, ஆகையால் தான், அதுதானே அனைத்து உலகின் வழிகாட்டலுக்கும் அதனுடைய முழுவாழ்க்கையையும் தெய்வீகத்தை (இறைமையை) நோக்கி உயர்த்துவதற்கும் உரிய சித் பொருளின் அதியுன்னத அறிவாக மற்றும் சக்தியாக இருக்கமுடியாது.

மதத்திலிருந்து மேற்கத்தியப் பின்வாங்குதல், அதனுடைய கேட்புரிமையின் மற்றும் வற்புறுத்தலின் அதிகபட்சக்குறைப்பு மூலம் ஐரோப்பா இடைக்கால மதப்போக்கிலிருந்து மறுமலர்ச்சி வழியாக மற்றும் சமயசீர்திருத்தம் வழியாக நவீன பகுத்தறிவு மனப்போக்கிற்கு முன்னேறியது; இந்த மனப்போக்கு நம் சாதாரண மண்ணுலக வாழ்க்கையை நம்முடைய ஒரே முதன்மையானஈடுபாடாக ஆக்குதல், அனைத்து ஆன்மீகத் தேடலினின்றும் விலகி நமது கீழ்மட்ட உறுப்புகளின் விதிமுறைப்படி நம்மை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியாகும்; ஓர் எதிர்மறைத் தவறாக, மாறுபட்ட அறியாமையின் உச்சமாக, ஒரு தவறான வலியுறுத்தலிலிருந்து ஒரு தவறான மறுப்புக்கு ஒரு குருட்டுத்தனமான ஊசலாடலாக இருந்தது. இந்தப்போக்கு தவறானது. ஏனென்றால் அத்தகையதொரு வரையறைக்குட்பட்ட நிலையிலும் கட்டுப்பாட்டிலும் முழுமை காணமுடியாது; ஏனென்றால் அது மனித வாழ்க்கையின் முழுமையான விதிமுறையை, அதனுடைய மிக ஆழ்ந்த தூண்டுதலை, அதி மறையியலான உள்ளுந்துதலை மறுக்கிறது. மிக உயர்ந்ததிலுள்ள ஒளி மற்றும் சக்தியால் மட்டுமே தாழ்ந்தவை முழுமையாக வழிநடத்தப்பட்டு உயர்த்தப்பட்டு முழுநிறைவடைய முடியும். மனிதனின் கீழ்மட்ட வாழ்க்கையின் வடிவம், அதனுள் தெய்வீகத்தின் இரகசியம் புதைந்திருந்தாலும் தெய்வீகமற்றதே, மேலும் உயரிய விதியைக் கண்டுபிடிப்பதன் மூலமும் ஆன்மீக ஒளியாலும் மட்டுமே அதைத் தெய்வீகப்படுத்த முடியும். அதற்குமாறாக, வாழ்க்கையைக் கண்டனம் செய்யும் அல்லது நம்பிக்கை இழக்க வைக்கும் அல்லது அதன் வளர்ச்சியை ஊக்கங்கெடவைக்கும் அனைத்து பொறுமையின்மையும், அது இப்பொழுது தெய்வீகமற்றதாக இருப்பதாலும், ஆன்மீக வாழ்க்கைக்கு இசைவாக இல்லாததாலும் சரிநிகரான அஞ்ஞானமேயாகும் (andham tamah). உலகாயதன் தன்னுடைய சொந்த வாழ்க்கையின் விதிமுறையாக மதம் தனித்த முறையால் தன்னுடைய ஆற்றலுக்கும் ஒருமுகப்படுத்தப்பட்ட நாட்டத்திற்கும் ஏற்றவாறு பலன்களைப் பெறுவதைப் போல, உலகத்தை வெறுத்து ஒதுக்கும் மடத்துத் துறவி, வெறுந் தபசி, அவனுடைய முறையால் அவனுடைய சொந்தத் தனிமனித மற்றும் தனித்த உய்வை (salvation) அவனுடைய துறவு மற்றும் தவத்திற்குரிய ஆன்மீகக் கைம்மாறாக அடையலாம்; ஆனால் இவர்களில் யாரும் மனித இனத்திற்கு உண்மையான வழிகாட்டியாகவும் அதனுடைய சட்டங்களை வகுப்பவராகவும் இருக்கமுடியாது.

துறவி மடத்து மனப்போக்கில் வாழ்க்கை மற்றும் அதனுடைய வேணவாக்களைப் பொறுத்தமட்டில் ஓர் அச்சம், ஒரு வெறுப்பு, ஓர் அவநம்பிக்கை உள்ளது; ஒருவன் எதற்கு முற்றிலும் பரிவுணர்ச்சியின்றி இருக்கின்றானோ, எதை இயன்ற அளவு குறைக்கவும் ஊக்கங்கெடச் செய்யவும் நினைக்கிறானோ, அதற்கு அவன் ஓர் அறிவார்ந்த வழிகாட்டியாக இருக்க முடியாது. சுத்தத் துறவுப்போக்கு, வாழ்க்கையையும் மனித சமுதாயத்தையும் நெறிப்படுத்தினால், அதைத் தன்-மறுதலிப்புக்கும் (self-denial) மற்றும் அதற்கே உரிய நோக்கங்களினின்றும் புறஞ் செல்வதற்கான வழிக்கும் அதை ஆயத்தப்படுத்தவே முடியும். ஒரு துறவியின் வழிகாட்டல் கீழ்மட்ட செயல்பாடுகளைப் பொறுத்துக் கொள்ளலாம், ஆனால் அவற்றை இறுதியில் குறைக்கவும், முடிவாக அவற்றிற்கே உரிய செயல்களை நிறுத்திவிடவும் இணங்கவைக்கும் நோக்கத்துடனேயே அவ்வாறு செய்கிறது. வாழ்க்கையின் ஆதிக்கத்திற்கு உட்படாமல், வாழ்க்கையைக் கவிந்து கொள்வதற்காக அதனினின்றும் விலகியிருக்கும் ஆன்மீகம், இந்த இயலாமைக்கு உட்படாது. பண்டைய இந்தியக் கருத்தில் ரிஷி மனித வாழ்க்கையை அதனுடைய முழுமையை நோக்கி வழிகாட்டி நடத்திச் செல்லும் ஆன்மீக மனிதமாதிரியாகக் காட்டப்பட்டுள்ளார்.

*(தொடரும்...)*

## அறிக்கைகள் (REPORTS)

**திருத்தப்பட்ட காலாண்டு அறிக்கை வார்ப்புரு (டெம்ப்ளேட்) - டிசிஜி-யின் முக்கியத் தகவல்**
(Revised Quarterly Report Template – Important Update from DCG)

அன்பார்ந்த நண்பர்களே,
இதுவரை பெறப்பட்ட காலாண்டு அறிக்கைகளை மதிப்பாய்வு செய்த பிறகு, தற்போதுள்ள காலாண்டு அறிக்கை வார்ப்புருவை (டெம்ப்ளேட்டை) மாற்றியமைத்து எளிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாங்கள் கண்டறிந்துள்ளோம். திருத்தப்பட்ட வார்ப்புரு இங்கே இணைக்கப்பட்டுள்ளது.
இந்த அறிக்கை உங்கள் நன்கொடையாளர்கள் அனைவருக்கும் (அல்லது குறைந்தபட்சம் முதல் ஐந்து நபர்களுக்கு, உங்களிடம் பலர் இருந்தால்), டிசிஜிக்கு ஒரு நகலுடன் அனுப்பப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.
கூடுதலாக, இந்த வார்ப்புருவின் முடிவில் உள்ள குறிப்புகள் உங்கள் பார்வைக்கு மட்டுமே என்பதை நினைவில் கொள்ளவும்– தயவுசெய்து அவற்றை நன்கொடையாளர்கள் அல்லது டிசிஜிக்கு அனுப்ப வேண்டாம்.
நன்றி. வாழ்த்துகள், டிசிஜி குழு, மின்னஞ்சல்: dcg@auroville.org.in

**நன்கொடை சேனல் குழு**
**நன்கொடைகள் பயன்பாட்டு காலாண்டு அறிக்கைகளுக்கான திருத்தப்பட்ட வடிவம்**
பதிப்பு: 19.07.24

---

| | | |
|---|---|---|
| 1 | திட்டம் / செயல்பாடு / நிறுவனம் (யூனிட்) பெயர்: | |
| 2 | பெற்றோரின் பெயர் மற்றும் அதன் அறக்கட்டளை: | |
| 3 | அறிக்கை தேதி: | |
| 4 | காலாண்டு முடிவிற்கான அறிக்கை (தேதி): | |
| 5 | திட்டம்/செயல்பாடு செயல்படுத்துவதற்கு பொறுப்பான நபர்கள்: | |
| 6 | உங்கள் முக்கிய நன்கொடையாளர்களின் பெயர்(கள்) மற்றும் நாடு(கள்) (முதல் 5): | |
| 7 | கடந்த நிதியாண்டில் செலவிடப்பட்ட தொகை: | |
| 8 | நடப்பு நிதியாண்டின் (ரூபாய்) ஏப்ரல் 1ஆம் தேதியின் தொடக்க இருப்பு (உங்கள் நிதிச்சேவை கணக்கு+(சையர் கணக்கு பொருந்தினால்)+ யூனிட்டி ஃபண்ட் கணக்கு): | |
| 9 | இந்த காலாண்டின் தொடக்க இருப்பு: | |
| 9 | இந்த காலாண்டில் பெறப்பட்ட நன்கொடைகள் (INR): | |
| 10 | இந்த காலாண்டில் செலவிடப்பட்ட மொத்த தொகை: | |
| 11 | செலவழிக்கப்படாத நன்கொடைகளின் இருப்பு: | |
| 12 | காலாண்டின் செலவினங்களின் கூறுகள் | |
| 12.1 | நிலையான சொத்துக்களை உருவாக்குதல்- **அசையாச் சொத்து** (நிலம், கட்டிடம், ஆழ்துளை கிணறு...): | |
| 12.2 | நிலையான சொத்துக்களை உருவாக்குதல்- **அசையும் சொத்து** (m/cs, வாகனங்கள், தளபாடங்கள், கணினிகள்....: | |
| 12.3 | நிறுவுதல் செலவுகள்: | |
| 12.4 | நிர்வாகச் செலவுகள்: | |
| 12.5 | வேறு ஏதேனும் தலைப்பு (தயவுசெய்து குறிப்பிடவும்):<br>அ) தலைப்பு பெயர்:<br>ஆ) தலைப்புத் தொகை: | அ)<br>ஆ) |
| 13 | விவரிப்பு: அதிகபட்சம் 1 ஏ4 தாள், உள்ளடக்கியது:<br>- செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் முடிந்தது<br>- பயனாளிகளின்/ஒவ்வொரு செயல்பாடு/நிகழ்வின் பதிவு எண்ணிக்கை<br>- விளைவுகள்<br>- சவால்கள்<br>வேறு ஏதேனும் தகவல் அல்லது கருத்துகள்<br>புகைப்படங்கள் / வீடியோக்களுக்கான இணைப்புகள் | |

குறிப்புகள்:

1. தயவுசெய்து இந்த அறிக்கையை உங்கள் முக்கிய நன்கொடையாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பவும் எங்களுக்கு நகல் அனுப்பவும். தயவுசெய்து இந்தக் குறிப்புகளை அனுப்ப வேண்டாம் (அவை உங்கள் பார்வைக்காக மட்டுமே). உங்கள் நன்கொடையாளர் வழங்கிய வடிவம் இருந்தால், அந்த வடிவமைப்பைப் பயன்படுத்தவும், ஆனால் மேலே உள்ள தகவலை அதில் இணைக்கவும்.
2. அனைத்து சையர் (SAIIER) துணைப்பிரிவுகள் / பள்ளிகள் இந்த அறிக்கைகளை சையருக்கு அனுப்பும், அவர்கள் ஒருங்கிணைத்து நன்கொடையாளர்களுக்கும் டிசிஜிக்கும் அனுப்புவார்கள்.
3. ஒரு யூனிட்/செயல்பாடு ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்கள் அல்லது செயல்பாடுகளை நன்கொடை மூலம் நிர்வகித்தால், ஒவ்வொரு திட்டத்திற்கும் அல்லது செயல்பாட்டிற்கும் ஒரு தனித்தனி அறிக்கை தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.
4. ஏதேனும் விளக்கங்கள் அல்லது கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: நரேன்/சந்தீப், தொலைபேசி: 88700 89187, மின்னஞ்சல்: dcg@auroville.org.in

## அறிவிப்புகள் (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

நினைவூட்டல்: **ஜூலை 26 வெள்ளிக்கிழமை இரவு 8:00 மணி**: "வீடு" **(HOME)** - 2008, சுவிட்சர்லாந்து/பிரான்ஸ்/பெல்ஜியம்

**ஆகஸ்ட் 2, வெள்ளிக்கிழமை - இரவு 8:00 மணிக்கு - "தி பாய் அண்ட் தி ஹெரான்" ("THE BOY AND THE HERON"),**
*இயக்கம்* - ஹயாவோ மியாசாகி, ஜப்பான், 2023.

*கதைச்சுருக்கம்:* தீயில் தனது தாயார் காணாமல் போன பிறகு, 11 வயது சிறுவனான மஹிடோ, டோக்கியோவை விட்டு கிராமப்புறங்களில் உள்ள தனது குடும்பத்தின் தோட்டத்தில் தனது தந்தையுடன் வசிக்க வேண்டியதாயிற்று, அங்கு அவன் ஒரு சாம்பல் ஹெரானை சந்திக்கிறான், அது சிறிது சிறிதாக அவனுக்கு வழிகாட்டியாக மாறுகிறது. மேலும் அவனது கண்டுபிடிப்புகள் மற்றும் கேள்விகள் மூலம் அவனைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்து கொள்ளவும், வாழ்க்கையின் மர்மங்களை உடைக்கவும் உதவுகிறது.

சுவாரஸ்யமாக, அதன் அசல் ஜப்பானிய தலைப்பு "And how do you live?" ("நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்?")
இந்தப் படத்தை அபிஜித் அறிமுகப்படுத்துவார். அதன் ஆங்கிலப் பதிப்பில், கிறிஸ்டியன் பேல், டேவ் பாடிஸ்டா, ஜெம்மா சான், வில்லெம் டாஃபோ, கரேன் ஃபுகுஹாரா ஆகியோர் குரல் கொடுப்பார்கள். *இப்படத்தின் கால அளவு: 2 மணிநேரம் 04 நிமிடம்.*

---

**ஆம்பித்தியேட்டர் - மாத்ரிமந்திர்** (Amphitheatre - Matrimandir)



**சூரிய அஸ்தமனத்தில் சாவித்திரியுடன் தியானம்.**

**கோடைக்காலத்திற்குப் பிறகு, சுனிலின் புத்தாண்டு இசையுடன் எங்கள் தியானங்களுடன், ஸ்ரீ அரவிந்தரின் நீண்ட மந்திரக் கவிதையான சாவித்ரியின் சுனிலின் தனிச்சிறப்புமிக்க பின்னணி இசையுடன் ஸ்ரீ அன்னை வாசிப்பு நிகழ்வையும் மீண்டும் தொடங்குகிறோம்.**

**வியாழன்தோறும் மாலை 6.00 முதல் 6.30 வரை** (வானிலையைப் பொறுத்து)

ஆரோவில்லின் மையத்தில் உள்ள அழகிய திறந்தவெளியை கண்டு மகிழுங்கள்!
அனைவருக்கும் நினைவூட்டல்: ஒருமை பூங்கா (தி பார்க் ஆஃப் யுனிட்டி) அமைதி, தியானம், ஆன்மீக அகப்பணிக்கான இடமாகும், மேலும் அங்கே அதை மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
அனைவருக்குமான வேண்டுகோள்: கேமரா, ஐ-பேட், செல்போன் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டாம். புகைப்படங்கள் எடுக்க வேண்டாம்.
அன்பான விருந்தினர்களே, தயவுசெய்து உங்கள் விருந்தினர் அட்டையை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள் - மாலை 5.45 மணி *முதல் தியானம் முடியும் நேரம் வரை மட்டுமே ஆம்பித்தியேட்டரில் இருக்க அனுமதிக்கப்படுகிறது.*
*நன்றி. சூர்யா, வேல்முருகன், வினய்*

---

**ஷரங்காவில் உள்ள டாய்ச்சி ஹால் வழங்கும் - தி ஆர்ட் ஆஃப் டாய்ச்சி - ஸ்டீவனோவிச்சின் முறை**
(TAI CHI HALL in SHARNGA Presents – THE ART OF CHI – Stevanovitch's method)

**டாய்ச்சி சுவான் தீவிரப் பயிற்சி -ஆகஸ்ட் 5 முதல் ஆகஸ்ட் 24 வரை - திங்கள் முதல் சனி வரை, காலை 7.30 - 10.30 மணி**

ஆரம்பநிலை: ச்சி மற்றும் டாய்ச்சி அடிப்படைகள்
மூன்று வாரங்கள், ச்சி ஒர்க் மற்றும் முழு 24-தோரணை வடிவத்தின் கண்டறிதல் மூலம் மூன்று படிகள்.

கிருஷ்ணா தலைமையில், இந்த ஒர்க் முக்கியமாக இவற்றை நோக்கியதாக உள்ளது:
கவனம் செலுத்த மனத்தை ஒருமுகப்படுத்தும் நுட்பங்கள்; சுவாசம் மற்றும் தசை தளர்வு மூலம் உடலின் தேர்ச்சி; சமநிலை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் இயக்கத்தை மேம்படுத்துதல்; ச்சி அணிதிரட்ட கற்றல். முதலில் அதை உணர்ந்து, பிறகு வழிகாட்டுதல்.
மூன்று காரணிகளைப் பயன்படுத்தி ஒருவரின் உடலில்: விருப்பம், கற்பனை மற்றும் தசை செயல்பாடு. இது ஒரு பொழுதுபோக்கு நடவடிக்கை.
தகவல் மற்றும் முன்பதிவுக்கு, 0413-2623187 என்ற எண்ணில் கிருஷ்ணாவைத் தொடர்பு கொள்ளவும்.
மின்னஞ்சல்: taichi@auroville.org.in இணையதளம்: taichi.auroville. org.in, www.artduchi.com

---



**இந்தியப் பெவிலியன் பாரத் நிவாஸ் வழங்கும் -**

**விஷ்ணு அர்ப்பணம் - வழங்குவோர் புதுவை பாரத்தாலயா -**

**கலைமாமணி டாக்டர் அபயகரம் கிருஷ்ணன், கலைமாமணி டாக்டர் பிரீத்தா பிரபுதாஸ் குழுவினர்**

**04 ஆகஸ்டு 2024, இரவு 7 மணி, சாச்சு, பாரத் நிவாஸ்**

விசாரணை தொடர்புக்கு கிருஷ்ணா 9787880211
பாரத் நிவாஸ் மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.

## பாரத் நிவாஸ் பாத்வே கஃபே உங்களை மதிய உணவிற்கு அழைக்கிறது
(Bharat Nivas Pathway cafe invites you for lunch)

பாரத் நிவாஸ் பாத்வே கஃபே மிகவும் நியாயமான விலையிலும் அதேசமயம் ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள், தன்னார்வலர்கள் ஆகியோருக்கு 20% தள்ளுபடி விலையிலும் அளிக்கிறது. எங்களின் ஆரோக்கியமான மற்றும் சுத்தமான உணவை சாப்பிட வாருங்கள் என்று உங்களை அழைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். உணவுப் பட்டியலில் சாண்ட்விச்கள், பர்கர், வடை பாவ், ரொட்டி ஆம்லெட், ஜூஸ், லஸ்ஸி ஆகியவையும், வெரைட்டி ரைஸ், ஏர் ஃபிரைட் பிரெஞ்ச் பிரைஸ் ஆகியவை அடங்கும். ஒருவர் 100 ரூபாய்க்குள் முழு மதிய உணவைப் பெறலாம். தயவுசெய்து வந்து இவற்றை முயற்சி செய்து பார்த்து எங்களை ஊக்கப்படுத்தவும்.

*பாரத் நிவாஸ் குழு*

---

## ஆகஸ்ட் 1 முதல் 7 வரை சர்வதேச தாய்ப்பால் ஊட்டுதல் வாரத்தை கொண்டாடுங்கள்!
(Celebrate International Breastfeeding Week from 1st to 7th August!)

தாய்ப்பால் ஊட்டல் என்பது உடலை மட்டுமல்ல, ஆன்மாவையும் வளர்க்கும் ஒரு புனிதமான செயலாகும், இது காலவரம்பற்ற வாழ்க்கை சுழற்சி மற்றும் மனிதகுலத்தின் பகிரப்பட்ட சாரத்துடன் நம்மை இணைக்கிறது. இது நமது பொதுவான பயணம் மற்றும் நம் அனைவரையும் ஒன்றிணைக்கும் தெய்வீகப் பிணைப்பின் ஆழமான நினைவூட்டலாகும்.

இந்த முக்கியமான வாரத்துக்கான சிறப்பு கலைப் படைப்புகளை கண்டு மகிழுங்கள் (ஜூலை 31 வரை உங்கள் சமர்ப்பிப்புக்கு திறந்திருக்கும்!!): ஞாயிறு தவிர தினமும் மாலை 4:30 - 6:00 மணி வரை ஆரோமோட், மார்னிங்ஸ்டார் அலுவலகம் (முன்னாள் யோகா ஸ்டுடியோ).

சிறப்பு நிகழ்வுகள்:
ஆகஸ்ட் 1, வியாழன்: மாலை 4.30 முதல் 6.00 வரை தாய்ப்பால் ஊட்டல் பற்றிய விளக்கக்காட்சி
ஆகஸ்ட் 4, ஞாயிறு: கவிதை மற்றும் கதைகள் பகிர்வு, காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை ஒரு அழகான காலை வேளையை அனுபவித்து மகிழுங்கள். இந்த நிகழ்வின்போது "கோல்டன் மில்க்" வழங்கப்படும்.
ஆகஸ்ட் புதன் 7: விளக்கக்காட்சி; "பிறப்பு - தூல உலகில் நுழைவு. முக்கியத்துவம் மற்றும் அதிசயம்" (“Birth - Entry into the Physical World. Significance and Miracle”) மாலை 4.30 முதல் 6.00 மணி வரை. அன்புடன் வரவேற்கிறோம்!
தொடர்புக்கு: உல்ரிக் ஊர்வசி 9751513906, mothersworkforTheMotherswork@gmail.com

---



## வாழும் அன்பான உண்மை பற்றிய சத்சங்கம்
(Satsanga on Living Loving Truth)

உண்மை என்றால் என்ன? அன்பு என்றல் என்ன?
நாம் எப்படி அன்பான சத்தியத்தில் ஒன்றாக வாழவும் வளரவும் முடியும்?
இதுபோன்ற கேள்விகளை ஆழமாக ஆராய, வாழும் அன்பான உண்மை பற்றிய ஆன்லைன் சத்சங்காவிற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.
**ஆகஸ்டு 4 முதல் ஆகஸ்டு 15 வரை.**
மேலும் விவரங்கள்: bit.ly/livinglovingtruth
கருணை மற்றும் நன்றியுணர்வுடன், *தேவன், வித்யாமந்திர் மற்றும் சமஸ்கிருதம் ஆரோவில் குழு சார்பில்*

---

## திரைப்படப் படப்பிடிப்பு மற்றும் நன்கொடை வேண்டுகோள் (Movie Shoot and Donations Appeal)

ஜூலை 26 வெள்ளிக்கிழமை அன்று, இந்தியத் திரைப்படத் தயாரிப்பிற்காக கடற்கரையில் நடைபெறும் திரைப்படப் படப்பிடிப்பில் எங்கள் நாய்கள் நட்சத்திரங்களாக இருக்கும். அழகான தயாரிப்பு குழுவும் பிரபல நடிகையும் படப்பிடிப்பிற்கு முன் காப்பகத்திற்குச் சென்று நன்கொடைகளை வழங்குவார்கள் மேலும் அவர்களுடன் நடிக்கும் நாய்களுடன் நட்பு கொள்வார்கள். துரதிர்ஷ்டவசமாக, இந்த வாரம் சோலார் கிச்சன் முன் இருக்கும் நடமாடும் கால்நடை கிளினிக் சேவையை நாங்கள் இரத்து செய்ய வேண்டியுள்ளது, ஆனால் ஆரோவில் மற்றும் அதன் அற்புதமான விலங்குகளுக்கு எங்கள் சேவைகளை வழங்க அடுத்த வாரம் வருவோம்.

நாங்கள் இப்போது பழைய நாய்கள் காப்பகத்தில் பயன்படுத்தப்படாத ஒரு சிறிய நிலம் முள்புதராக உள்ளது. அதை ஒரு சிறிய நாய்கள் வசிக்கும் காடாக உருவாக்க சுத்தம்செய்து வருகிறோம். மேலும் அதில் நாங்களே உருவாக்கிய நாய் கொட்டில்களை அமைக்கவுள்ளோம், அதை புதிய காப்பகத்திற்கும் எடுத்து செல்லலாம். இப்பகுதிக்கு வேலி அமைக்கப்பட வேண்டும், மற்ற காப்பகங்கள் பருவமழைக்கு தகுந்தவாறு அமைக்க வேண்டும். எஃப்ஏஎம்சி அதன் மாதாந்திர நிதியான ரூ.50,000-ஐ அதிகரிக்க முடியாததால், எங்களுக்கு சிரமமாக உள்ளது. கட்டிடப்பொருட்கள், சிமெண்ட், வேலிகள், மணல், மரம், பழைய கூரை ஷீட்டுகள், உலோகக் கம்பங்கள் மற்றும் நெரிசலான காப்பகத்தை சரிசெய்வதற்கு எங்களுக்கு உதவக்கூடிய அனைத்தையும் நன்கொடையாக வழங்குமாறு அன்பான ஆரோவில்வாசிகள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். பொருட்களை நன்கொடையாக வழங்கக்கூடிய சில ஆரோவில் நிறுவனங்கள் எங்களைத் தொடர்பு கொண்டால் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்போம். பழைய புத்தூஸ் முன் எங்களுடைய பாரல் உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள், அதில் பயன்படுத்திய துணி, செய்தித்தாள்கள், அரிசி மற்றும் காப்பகத்திற்கான பிற பொருட்களை சேகரிக்கிறோம். காப்பகம் உயிர்ப்புடன் இருக்க எங்களுக்கு உதவுங்கள். ஆரோவில்லில் 2005ஆம் ஆண்டு முதல் நாய்கள் காப்பகம் உள்ளது மற்றும் ஆரோவில் குடியிருப்பாளர்களையும் விலங்குகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க அதன் நாய்கள் காப்பகம் தேவைப்படுகிறது. உங்களால் முடிந்த எந்த வகையிலும் எங்களுக்கு உதவவும்! எங்கள் நிதிக்கணக்கு எண் 251391 - www.aurovilledogshelter.com

நீங்கள் தன்னார்வத் தொண்டு செய்ய விரும்புகிறீர்களா? உங்களை நாங்கள் மிகவும் வரவேற்கிறோம்! வாட்ஸ்அப் செய்தி மூலம் ஆர்தரை தொடர்பு கொள்ளவும்: 812222266 (தயவுசெய்து அழைப்புகள் கூடாது)

---



**இந்தியப் பெவிலியன் பாரத் நிவாஸ் வழங்கும் -**

**கலர்ஃபுல் பைரவி - இசை நிகழ்ச்சி**

**06 ஆகஸ்டு 2024, இரவு 6.30 மணி, சாச்சு, பாரத் நிவாஸ்**

விசாரணை தொடர்புக்கு கிருஷ்ணா 9787880211
பாரத் நிவாஸ் மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.

---

**ஒருமைப் பூங்கா, மாத்ரிமந்திர் ஆகியவற்றின் உள்ளே செல்லுதல்** (Access to the Park of Unity and Matrimandir)

ஒருமைப்பூங்கா, மாத்ரிமந்திர், இதழ்கள், தாமரைக்குளம், ஆலமரம் ஆகியவை அமைதிகாக்க வேண்டிய இடங்கள் ஆகும்

- தினசரி: காலை 6.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை, ஒருமைப் பூங்கா (பார்க் ஆஃப் யுனிட்டி) ஆரோவில்வாசிகள், புதிதோய்ச்சேர்ந்தோர் ஆகியோருக்காக திறந்திருக்கும்.
- தினசரி: காலை 9.00 மணி முதல் மாலை 3.30 வரை ஆரோவில்வாசிகள் நெருங்கிய குடும்பத்தினரையும் நண்பர்களையும் தோட்டத்திற்கு அழைத்து வரலாம்.
- தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் ஆகியோர் ஒருமைப் பூங்காவிற்கு செல்வதற்கு பாஸ் தேவை. பாஸில் அவர்கள் பார்வையிடுவதற்கான நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும்.
- ஒருமைப் பூங்காவில் நடைபெறும் அறிவிக்கப்பட்ட நிகழ்வுகளில் ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தோர், தன்னார்வலர்கள், பாஸ் வைத்திருப்பவர்கள், விருந்தினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளலாம், விருந்தினர்கள் ஆரோகார்டுகளை தங்களுடன் கொண்டுவரவேண்டும்

**மாத்ரிமந்திரின் உள்அறை**

மாத்ரிமந்திர் ஓர் அமைதியான மனதை ஒருமுகப்படுத்தும் இடமாகும்.

- மாத்ரிமந்திரின் உள்அறை ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தோர் ஆகியோருக்கு திறந்திருக்கும் நேரம்:
  திங்கள் - சனி வரை, காலை 6.00 - காலை 8.00 மணி வரை, மாலை 4.30 - இரவு 7.30 மணி வரை
  ஞாயிறு அன்று காலை 6.00 - பிற்பகல் 12.00 மணி வரை, மாலை 4.30 - இரவு 7.30 மணி வரை
- சாவியில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வலர்களுக்கு உள்அறை திறந்திருக்கும் நேரம்:
  புதன் - திங்கள் - காலை 8.00 - 8.40 மணிவரை.
  அலுவலக கேட்டுக்கு காலை 7.45 மணிக்குள் வரவேண்டும்.
- இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மட்டும், ஆரோவில்வாசிகள் அதிகபட்சம் தங்களது 5 நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்களை மாத்ரிமந்திரின் உள் அறைக்கு அழைத்து வரலாம், 3 முதல் 5 நாட்களுக்கு முன்னதாக mmconcentration@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி முன்பதிவு செய்துகொள்ளலாம்.
  செவ்வாய் & ஞாயிறு தவிர ஏனைய நாட்களில்: காலை 8.00 - 8.35 மணிவரை.
  அலுவலகக் கேட்டுக்கு காலை 7.45 மணிக்குள் வரவேண்டும்.
- உள்அறை, இதழ்கள், தோட்டங்கள் ஆரோவில் மற்றும் அவுட்ரீச் பள்ளி குழந்தைகளுக்கு திறந்திருக்கும் நேரம்:
  செவ்வாய் அன்று காலை 9.00 - 11.00 மணி வரை.
- ஆரோவில் நிறுவனங்கள் mmconcentration@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரியில் முன்பதிவு செய்து தங்கள் ஊழியர்களை உள் அறைக்கு அழைத்து வரலாம்.
  செவ்வாய் அன்று காலை 8.00 - 8.30 மணி வரை.

**மாத்ரிமந்திரின் இதழ்கள்**

- ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தோர், பாஸ் வைத்திருப்பவர்கள் ஆகியோருக்கு இதழ்கள் (பெடல்) திறந்திருக்கும் நேரம்: திங்கள் - ஞாயிறு - காலை 7 - 8 மணி வரை. செவ்வாய் அன்று மூடப்படும்.
- தினமும் மாலை 5 - மாலை 6 மணி வரை

**பார்வையாளர்கள் மற்றும் விருந்தினர்கள் மாத்ரிமந்திர் செல்வது குறித்து**
**மாத்ரிமந்திரை (வியூவிங் பாயின்ட்) வெளியிலிருந்து பார்க்கும் இடம்**

மாத்ரிமந்திரை (வியூவிங் பாயின்ட்) வெளியிலிருந்து பார்க்கும் இடம், பாஸ் வைத்திருக்கும் பொது மக்களுக்காக திறந்திருக்கும். மாத்ரிமந்திர் வியூயிங் பாயின்ட்டை பார்வையிடுவதற்கு கட்டணம் இலவசம்.
**ஆரோவில் பார்வையாளர்கள் மையத்தில் இலவச அனுமதிச் சீட்டுகளைப் பெறலாம்.**
வியூவிங் பாயின்ட் ஒருமைப் பூங்காவிற்கு தெற்கே அமைந்துள்ளது, பார்வையாளர்கள் மாத்ரிமந்திர், தோட்டங்கள், ஏரி ஆகியவற்றின் பரந்த காட்சியை இங்கிருந்து காணலாம்.
**பார்வையாளர்கள் மையம் திறந்திருக்கும் நேரம்:** தினசரி: காலை 9.00 - மாலை 5.30 மணி வரை

**மாத்ரிமந்திரின் உள் அறை**

உள்அறையில் மனதை ஒருமுகப்படுத்த முன்பதிவு செய்துள்ள பார்வையாளர்கள், விருந்தினர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். உள்அறையில் மனதை ஒருமுகப்படுத்த விரும்பும் பார்வையாளர்களும் விருந்தினர்களும் முதலில் வியூவிங் பாயின்ட்டை பார்வையிட்ட பிறகு, பார்வையாளர் மையத்தின் தகவல் மேசையில் இது குறித்து விசாரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன்னதாக உள்அறையில் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு முன்பதிவு செய்ய வேண்டும். மனதை ஒருமுகப்படுத்துவதற்கான முன்பதிவு செய்யவேண்டும் எனில் ஒரு வாரத்திற்கு முன்னதாக மட்டுமே செய்யப்படும், அந்த வாரத்தில் எந்த நாட்களில் முன்பதிவு பட்டியலில் முன்பதிவு செய்ய இடமிருக்கிறதோ அந்த நாட்களுக்கு மட்டுமே முன்பதிவு செய்யப்படும். உள்அறைக்கு செல்ல குறைந்தபட்ச வயது 10 ஆகும். உள்அறையில் மனதை ஒருமுகப்படுத்த வரும் பார்வையாளர்களுக்காக இதழ்கள் (பெடல்கள்) திறந்திருக்கும்.

## ஃபுட்லிங்க் மார்க்கெட் (FOODLINK MARKET)



ஆரோவில் பண்ணைகளிலிருந்து பழங்கள், காய்கறிகள், பால், முட்டைகள்.
சனிக்கிழமை தோறும், காலை 9.30:00 - 12:30 மணி

ஃபுட்லின்க், சோலார் கிச்சன், கிரவுன் ரோடு, ஆரோவில்
அழைப்பு/வாட்ஸ்அப்: +91 83002 68804

பணப்பரிமாற்றம் இல்லை. அனைத்து கட்டணங்களும் ஆரோவில் நிதிச்சேவை கணக்கு, ஆரோகார்டு அல்லது யுபிஐ மூலம் செய்யப்பட வேண்டும்.

---



**இந்தியப் பெவிலியன் பாரத் நிவாஸ் வழங்கும் -**

**The Nature's Life Journey (இயற்கையின் வாழ்க்கைப் பயணம்)**
**ஆர். இராஜேந்திரனின் ஓவியம் மற்றும் புகைப்படக் கண்காட்சி**

**04 ஆகஸ்டு 2024, கலாகேந்திரா, பாரத் நிவாஸ்**

விசாரணை தொடர்புக்கு கிருஷ்ணா 9787880211
பாரத் நிவாஸ் மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.

---

## சாதனா ஃபாரஸ்ட்டில் வெள்ளிக்கிழமை தோறும் ஈக்கோ பிலிம் கிளப்
## (Eco Film Club, every Friday at Sadhana Forest)

**நிகழ்வுகளின் அட்டவணை:**
16:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு சென்று பார்க்க இலவசப் பேருந்து
16:30 சாதனா ஃபாரஸ்ட்டை சுற்றிப்பார்த்தல்
18:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு ஈக்கோ பிலிம் கிளப்பிற்கு இலவச பேருந்து
18:30 ஈக்கோ பிலிம் கிளப் ஆனது சாதனா ஃபாரஸ்ட் படங்களின் "முன்னோட்டத்துடன்" தொடங்குகிறது
20:00 இரவு உணவு வழங்கப்படுகிறது
21:15 சாதனா ஃபாரஸ்ட்டில் இருந்து சோலார் கிச்சனுக்கு திரும்பிவர இலவசப் பேருந்து

திரைப்படத்திற்கு முன், சரியாக 16:30 மணிக்கு சாதனா ஃபாரஸ்ட்டை முழுவதும் சுற்றிப்பார்க்க எங்களின் மிகச் சமீபத்திய பணிகள் குறித்த தகவல்களைத் தெரிந்து கொள்ள எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்! திரைப்படத்திற்குப் பிறகு, இலவச 100% சைவ இயற்கைமுறை இரவு உணவிற்கு எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்!

இப்பேருந்து சேவை சாதனா ஃபாரஸ்ட்டால் இயக்கப்படுகிறது. பேருந்து சேவை பற்றிய கூடுதல் தகவலுக்கு சாதனா ஃபாரஸ்ட்டை வாட்ஸ்அப்பில் 8525038274 அல்லது 8122274924 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு: குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் வரவேற்கப்படுகிறார்கள்! குழந்தைகளுக்கு இரவு உணவு 19:00 மணிக்கு வழங்கப்படும்.

**2 ஆகஸ்டு, வெள்ளிக்கிழமை** - கியூபா – தி ஆக்ஸிடென்ட் ஈடன் - - 2011 / 53 நிமிடங்கள் / டக் ஷுல்ட்ஸ்
இந்த சிறிய தீவின் மாறுபட்ட நிலப்பரப்பு, அதன் இருப்பிடம், பனிப்போர் அரசியலின் மையத்தில் அதன் இடம் ஆகியவை அரைக்கோளத்தின் வளமான மற்றும் மிகவும் அசாதாரணமான இயற்கை சூழல்களில் சிலவற்றை பாதுகாக்க ஒன்றிணைந்தன.

---

## இலக்ஷ்மணன் கிருஷ்ணன் (Lakshmanan Krishnan)




இலக்ஷ்மணன் கிருஷ்ணன் அவர்கள் 25.06.1980 அன்று ஆரோவில்லில் பிறந்தவர் ஆவார். அவர் தமது சகோதரர்கள், சகோதரிகளான பார்த்தா, இலட்சுமி, ரேணுகா, இராமு ஆகியோருடன் தமது பெற்றோர் கிருஷ்ணன், சரோஜா ஆகியோரின் பராமரிப்பில் வளர்ந்தவர்.

ஆரோவில் பள்ளிகளில் படித்த அவர், டிரான்சிஷன் பள்ளியில் கணினி ஆசிரியராக தமது பணியைத் தொடங்கினார், பின்னர் அதன் நிர்வாகியாக ஆனார். ஆரோவில் பிரஸ் நிறுவனத்தின் நிர்வாகியான ஜெயலட்சுமியை மணந்த அவருக்கு நிகில், ஷரன் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர்.

அவரது தொழில்முறை துறைசார் வாழ்க்கைக்கு அப்பால், இலக்ஷ்மணன் அவர்கள் ஆரோவில்லில் சமூக நடவடிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார், குறிப்பாக தூய்மைப் பணிக்கு உதவிசெய்தார், ஆர்ஏ போன்ற அமைப்புகள் மூலம் சமூகச் சேவையில் தீவிரமாக பங்கேற்றார். எப்போதும் புன்சிரிப்புடனும் தாராள மனப்பான்மைக்கும் பெயர் பெற்றவரான அவர், தேவைப்படுபவர்களுக்கு உதவ எப்போதும் தயாராக இருந்தவராகவும் அவரை நினைவுகூர்வர்.

அவர் டிரான்சிஷன் பள்ளியில் பணிபுரிந்த காலத்தில் தேகசக்தியில் உடற்கல்வி ஆசிரியராகவும் பணியாற்றினார்.
இலக்ஷ்மணன் அவர்கள் ஃபேர்வெல் குழுவுடன் நெருக்கமாக இணைந்து, செயல்பாடுகள் சீராக நடப்பதை உறுதி செய்தார். இது தவிர, சமீபத்தில் ஆரோவில் நுழைவுச் சேவையிலும் பணிபுரிந்தார்.

அவரது மகிழ்ச்சியானது அவரைச் சுற்றியுள்ள அனைவருக்கும் அரவணைப்பையும் ஆறுதலையும் பரப்பியது. அவர் தமது குடும்பத்தில் வலிமையான தூணாக இருந்தார், நல்ல மற்றும் கெட்ட காலங்களிலும் உறுதியான ஆதரவையும் அன்பையும் வழங்கினார்.
அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும், அவரது ஆன்மா நம் இதயங்களிலும் நினைவுகளிலும் பதிந்திருக்கும்.
(ரேணுகா மற்றும் அவரது மகள் நிலா எழுதியது).